REGD. No. M. 4842

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 16—3—52 | இதழ் 37

# அவரும் அவர்களும்

சென்னைக்குப் புதிய கவர்னர் வருகிறார். அவர் ஒரு செல்வவான். பிரமுகர். காங்கிரஸ்காரர்.

சென்னையோ, பார்ப்பன ஆதிக்கம் பாதிக்கப்படுகிறது என்ற புகார் கிளியும் இடம். பார்ப்பன எதிர்ப்பு உணர்ச்சியும் பார்ப்பனீய, ஒழிப்புக் கிளர்ச்சியும் பல ஆண்டுகளாக இருந்து வருகிற இடம் என்று டெல்லிக்குப் பலரும் கூறி வந்திருக்கிறார்கள்

பார்ப்பனர், மத, சமுதாயத் துறைகளிலே, இலாபகரமான அந்தஸ்து பெற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இந்த அந்தஸ்தை பித்தலாட்டமான ஒரு புராண கால மனப்பான்மையைப் புகுத்தி பாமரரை ஏய்ப்பதால் தான் பெற முடிகிறது, சமூக நீதி நிலை நாட்டப்படவேண்டுமானால், பித்தலாட்டமாகப் பெறும் அந்தஸ்து ஆதிக்கம் தகர்க்கப்பட்டாக வேண்டும் என்ற கருத்து புயலளவுக்கு உள்ள இடம் சென்னை. எந்தப் பிரச்சினையிலும் இந்தப் பிரச்சினை உட் பிரச்சினையாக இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும்.

இதனை வகுப்புவாதம் என்று பழிமொழி சூட்டிக் கண்டிக்கும், இதனாலேயே நாடு நாசமாகிறது என்று பேசியும், இதை ஒழித்தாக வேண்டும் என்று முழக்கமிட்டும், பெசண்டு அம்மையார் கால முதல், டி. டி. கே. காலம் வரையில், விடா முயற்சி நடந்து வருவதும் அனைவருக்கும் தெரியும்.

சமூக நீதிக்காகப் பேசுவதும், வகுப்புத் துவேஷம் என்று திரித்துக் கூறப்பட்டு, குற்றவாளிக் கூண்டிலே. பலர் நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்பட்டதும் இங்குதான்.

விடா முயற்சி, திரித்துக் கூறல், சட்டம் கொண்டு தாக்குதல் எனும் எல்லா வழிகளைக் கையாண்டும், 'வகுப்புவாதம்' களைந்தெறியப் பட முடியாததாக உள்ள இடம் சென்னை.

வெள்ளையராட்சி மூலம் பெற வேண்டிய ஆதரவு வற்றியதும் காங்கிரஸ் மூலம் ஆதரவு பெற்று வளமான, வகுப்பு ஆதிக்க வெறியாம் பார்ப்பனீயம், நாளாகவாக, காங்கிரஸ் மூலமாகவும் அதிக அளவிலும் தொடர்ச்சியாகவும் ஆதரவு பெற முடியாது என்பதைப புரிந்து கொண்டுள்ள இடமும் சென்னை தான்.

காங்கிரசு மட்டும் என்ன, சட்டை கருப்பு இல்லையே தவிர, எங்களைப் போலத்தான் மட்டில், காங்கிரசுக் குள்ளேயே 'வகுப்புவாதம்' இருப் பதைத்தான் காண்கிறோம், என்று கோபமும் வெறுப்பும் கலந்த குரலில் பார்ப்பனப் பிரமுகர்கள் பேசுவதும் சென்னையில் தான்.

நாம் ஒன்றுபட்டு நமது குறையைக் கூறிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து பிராமண மகா சபை நடத்தி வருவதும் சென்னையில்தான்.

எவ்வளவோ கிளர்ச்சிகளுக்குப் பிறகும், நாட்டு மக்கள் மனதைப் பக்குவப்படுத்தும் பத்திரிகைச் சாதனம், பெரும்பாலும் பார்ப்பனரிடம் இருந்து வருவது, சென்னையில் தான.

ஆலைக்கு முதலாளி ஏன்? நிலத்திலே பிரபு ஏன்? என்று வீரதீரமாகக்கேட்கவும், அறிவாற்றலுடன் மாற்றுத் திட்டம் தயாரிககவும் நாடு முன் வந்திருக்கும் இந்த 'புரட்சி'க் காலத்திலேயும் கூட, ஆலயத்திலே ஐயர் ஏன், ஊரிலே அக்ரகாரம் ஏன், ஓட்டலிலே பிராமணாள் ஏன், பிறவியிலே உயர்வு தாழ்வு ஏன், என்று பேசவும், நாடு பயப்படுகிறது என்கிற நிலைமை நெளிகிற இடமும் சென்னை தான்.

நாடு முன்னேற, உலகிலே உயர் இடம் கிடைக்க, மக்களுக்குப் பாடுபடக் கூடிய ஒரே கட்சி, காங்கிரஸ் தான் என்று காப்பி ஆற்றித் தரும்

பார்ப்பனர் முதல் கலெக்டர் வேலை பார்க்கும் பார்ப்பனர் வரையிலே பேசி வந்ததும் சென்னையில்தான்.

காங்கிரசு ஒழிந்தால்தான் கஷ்டம் தீரும் என்ற அளவுக்கு, ஏழை எளியவர்கள் தீர்மானித்துத் தீர்ப்பளித்துக் காங்கிரசை முறியடித்திருப்பதும் சென்னையில்தான்.

பொது மக்களுக்குப் புத்தி கெட்டுவிட்டது, கெட்டவர் பேச்சைக் கேட்டுக் கேட்டுக் கெட்டுப் போகிறார்கள் என்று எல்லா பார்ப்பனப் பிரமுகர்களும் ஏசிக்கொண்டிருக்கிற இடம் சென்னை.

காங்கிரசாலே, மந்திரிசபை அமைக்க முடியாத நிலைமை ஏற்பட்டு, பிச்சை கேட்டும் தத்து எடுத்தும், கண் சிமிட்டியும் காவடி தூக்கியும், ஆசை காட்டியும் காசை இறைத்தும் ஆள்பிடித்து அரசு அமைக்கலாமா என்ற அற்ப வழியில் காங்கிரஸ் நுழைந்து தீரவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதும், சென்னையில்தான்!

இந்த சென்னைக்குத்தான் இந்த நிலைமையில், பிரகாசா எனும் பிரமுகர், கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மலேயாவில், தோட்டக் காடுகளில் பாடுபட்டுப் பாடுபட்டு, வெள்ளை முதலாளிகள் பவுன்களை மூட்டை மூட்டையாகக் கட்டிக்கொண்டு செல்வதையும், வறுமை தங்களைக் கொட்டிக் கொல்வதையும் தாங்கமாட்டாமல், மலேயாவிலே, பாட்டாளிகள் உரிமைக் கிளர்ச்சி செய்வது கண்டு கலங்கிடும் வெள்ளை முதலாளிகள், தங்கள் அரசிடம் முறையிட்டு, கலகக்காரரைச் சுட்டுத் தள்ளக்கூடிய திறமைசாலியான ஒரு வெள்ளைக்கார ஏகாதிபத்திய வெறியனை மலேயாவுக்கு அனுப்பும்படி கேட்டுப் பெற்றிருக்கிறார்கள்.

இங்கே பிரகாசா கவர்னராக வந்திருக்கிறார்!

இங்கே பிரகாசா கவர்னராக அனுப்பப்பட்டிருக்கிறார்!

இல்லை, இல்லை, இங்கே பிரகாசாவைக் கவர்னராக அனுப்பிவைக்கும்படி, சென்னைப்பார்ப்பனப் பிரமுகர்கள் காஷ்மீர் பார்ப்பனப் பிரமுகரான நேரு பண்டிதரிடம் முறையிட்டு, அவரும் அது சரி என்று கூறி இங்கே பிரகாசாவை அனுப்புகிறார்.

இப்படியா நடந்தது—ஒவ்வொரு மாகாணத்துக்கும் கவர்னர்களை நியமிக்கிறார்கள் அது ஜனாதிபதியின் உரிமை. பார்ப்பன பிரமுகர்கள் பிரகாசாவைச் சென்னைக்கு அனுப்பும்படி கேட்டுப் பெற்றனர் என்று கூறலாமா — தவறல்லவா இது— இதுதானே வகுப்புத் துவேஷம் என்று கேட்கத் தோன்றும், சிலருக்கு.

## சி. என். ஏ.

சி. என். ஏ. நெஞ்சு வலியின் காரணமாக, கடந்த ஒரு வாரகாலமாக இங்கு சிகிச்சை பெற்றபிறகு நீங்காததால் 11-3-52 அன்று காஞ்சி டாக்டர் பார்த்தசாரதியோடு சென்னைக்குச் சென்று டாக்டர் சடகோபனின் ஆலோசனைக்குப் பிறகு இங்கு, சிகிச்சை பெற்று வருகிறார். ஓயாத கார் பிரயாணமும், இடைவிடாத கூட்டங்களுமே, நெஞ்சு வலிக்கு காரணமென்றும், ஒரு மாதகாலம் பூர்ண ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும், டாக்டர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். இதனால் 11, 12. தேதிகளில் குறிப்பிடப்பட்டிருந்த தஞ்சை, குன்றத்தூர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியவில்லை. தொடர்ந்து திட்டமிடப்பட்ட சுற்றுப் பயணத்தையும் ரத்து செய்யும்படி நேர்ந்திருக்கிறது.

இட்டுக் கட்டியதல்ல, இந்தக் கருத்து.

சென்னைக்கு இவரை அனுப்பும்படி பார்ப்பனப் பிரமுகர்கள் கேட்டுத்தான் பெற்றிருக்கிறார்கள். ஆதாரம் இருக்கிறது. ஏன் கேட்டார்கள் என்பதை அறிந்துகொள்ள யூகம் அதிகம் தேவையில்லை.

சென்னைக்குக் கவர்னராக நியமிக்கப்பட்ட பிரகாசாவுக்கு, டெல்லியில் சென்ற கிழமை ஒரு பாராட்டு விருந்து நடைபெற்றது 'இந்து' இதழிலே செய்தியைக் காணலாம்.

விருந்துக்குத் தலைமை தாங்கினவர், அனந்தசயனம் அய்யங்கார்.

கோபால்சாமி அய்யங்காரும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் பாராட்டுரை வழங்கினார்கள்.

பூ! இதுதானா சங்கதி! அனந்தசயனம் அய்யங்காரும், கோபால்சாமி அய்யங்காரும் கிருஷ்ணமாச்சாரியாரும் விருந்து விழாவிலே கலந்து உபசார மொழி பேசினார்கள் என்றால், என்ன! இதைப் போய்ப் பிரமாதப்படுத்துவதா? பார்ப்பனர்களே பிரகாசாவைச் சென்னைக்குக் கவர்னராக நியமிக்கும்படி கேட்டு, பெற்று, அதன்படியே காரியம் நடந்திருக்கிறது என்று கூறுவது, இந்த விருந்து நடந்ததாலா! எவ்வளவு சின்னபிள்ளைத்தனம் இது— செச்சே! எவ்வளவு துவேஷபுத்தி —என்று சமரச வாசகர்கள் கூறக்கூடும்.

விருந்து ஒன்று அல்ல, யூகத்துக்குக் காரணம்.

சென்னைக்குக் கவர்னராகிறவரும், அவரை அன்று பாராட்டினவர்களும் பேசியதிலேயே, இந்தக் கருத்து தொக்கி நிற்கிறது — சராசரி அறிவு உள்ளவர்களுக்கும் புரிகிற அளவுக்கு-

ஆச்சாரியார், டெல்லியைவிட்டு அனுப்பிவைக்கப்பட்டபோதே, பிரகாசாவைப் பார்த்து, சென்னைக்கு வரவேண்டும், என்று கூறினார். வேடிக்கை பார்க்கவா கூப்பிட்டிருப்பார்! இருவருமே அந்தப் பருவம் கடந்தவர்கள்!! எனவே, மத்திய சர்க்கார் மந்திரியாகஇருந்த பிரகாசாவை, ஆச்சாரியார் சென்னைக்கு வரவேண்டும் என்று அழைத்தார் என்றால், அரசியல் காரணமாகத்தானே இருக்க முடியும்.

ஒரு சமயம் கவர்னர் பிரகாசா சென்னைப் பகுதிக்கு இதற்குமுன்பு வந்ததே இல்லைபோலும் அதனால்தான் ஆச்சாரியார் அவரை அழைத்திருக்கிறார் என்று எண்ணிவிடாதீர்கள். இதே விருந்துக் கூட்டத்திலே கவர்னர் பிரகாசா நான்சென்னைக்கு முன்பே பலதடவைகள் வந்

11-ம் பக்கம் பார்க்க

# விலை இறங்குகிறது! [அனல்]

**ம்பாய்**

"ஹலோ! செட்டியார்..."

"யார், செல்லாராமா! என்ன சேதிங்க?"

"கடலை மூட்டை 'ஆர்டர்' வந்தா—அனுப்பியாச்சா"

"எவ்வளவுக்குங்க..."

"ஒரு லட்சத்துக்கு"

**சென்னை**

'டெலிபோன்' மூலம் தகவல் பெற்ற, சிங்காரம் செட்டியார், 'ஆர்டர்'களைப் பார்க்கிறார். செல்லாராம், ஒரு லட்ச ரூபாய்க்கு சரக்கு கேட்டு பத்தாயிரம் ரூபாய் 'அட்வான்ஸ்' செய்திருக்கிற விபரம் தெரிகிறது. உடனே, சரக்குகள் பம்பாய்க்கு அனுப்பும்படி, சிப்பந்திகளுக்குக் கூறுகிறார். சரக்கு அனுப்பப்பட்டுவிட்டது! தகவலும், அறிவிக்கப்பட்டு விட்டது — செல்லாராமுக்கு. ஆனால், சரக்குகளின் சீது மட்டும், பம்பாயிலுள்ள, இந்தியன் பாங்கிக்கு அனுப்பப்படுகிறது.

**ம்பாய்**

செல்லாராம், "சரக்கு அனுப்பப்பட்டுவிட்டது. இந்தியன் பாங்கியில் மீதம் 90 ஆயிரத்தையும் கட்டிச் சரக்கைப் பெறவும்" என, சென்னைச் சிங்காரத்திடமிருந்து வந்த தகவலை வைத்துக் கொண்டிருக்கிறார். அப்போது, பம்பாய் இந்திய பாங்கியின் பியூன், வந்து சொல்லுகிறான், "(Invoice) வந்திருக்குங்க."

"சரி! சரி!! நாளைக்கு சரக்கை எடுத்துக்கிறேன்."

பணப் பெட்டியைப் பார்க்கிறார்—பணமில்லை 90 ஆயிரம். சரக்கோ எடுக்கப்படவேண்டும். உடனே, மெர்க்கண்டையல் பாங்கிக்கு — 'போன்' செய்கிறார். அவர், வரவு செலவு வைத்திருக்கும் பாங்கி அதுதான். சிங்காரம் செட்டியார் சரக்கு அனுப்பியிருப்பதைத் தெரிவித்து, அந்த சரக்கு மீது, கடன் தருமாறு கேட்கிறார்.

கடன் தரப்படுகிறது, பாங்கியால். இந்தியன் பாங்கியில் கட்டப்பட்டு, ரசீது பெற்றுக்கொண்டு, சரக்கைக் கொண்டுபோய் மெர்க்கண்டையல் பாங்கியில் வைக்கிறார்.

* * *

இன்று பெரிய வியாபாரிகள் செய்து வருவது, இதுதான்! கை முதல் சிறிது வைத்து, ஆயிரக் கணக்கிலும், லட்சக் கணக்கிலும் வியாபாரம் செய்ய — பாங்கிகள், பெரும் உதவியாயிருந்து வருகின்றன. வியாபாரிகளின் நம்பிக்கை பேரில், பாங்கிகள் தரும் பண உதவியைக் கொண்டே. செல்லாராம் போன்றாரும்—சிங்காரம் செட்டியாரைப் போன்றோரும். மிகப் பிரபலவியாபாரிகளாயிருக்கிறார்கள்.

கடலை மூட்டைக்கு வெளிநாடுகளில் கிராக்கி ஏற்படுமென்கிற, அறிகுறி தென்பட்டதும்தான், அவசர அவசரமாக, சென்னைச் செட்டியாரைக் கூப்பிட்டு சரக்குகளைத் தருவித்தார். சேமித்து வைத்தார். ஆனால், இவர் சரக்கு வாங்கிய மறுநாளே—சர்க்கார் உத்திரவு ஒன்றை பிறப்பித்திருக்கிறது—'ஏற்றுமதி வரியை அதிகமாக்கியிருக்கிறோம்' என்பதாக.

**லண்டனில்**

இந்திய சர்க்கார், ஏற்றுமதி வரியை அதிகமாக்கியிருக்கும் செய்தியைக் கண்ட லண்டன் தாம்சன் கம்பெனியார், பம்பாய் செல்லாராமிடமிருந்து கடலை மூட்டைகளை வாங்குவதற்குப் பதில், பாகிஸ்தான் முகம்மது இபராகிமிடமிருந்து வாங்குவது இலாபமென எண்ணுகின்றனர். அதனால், பம்பாய் செல்லாராமுக்கு, "ஆர்டர்" வரவில்லை! கடலை மூட்டைகள் தேங்கிக் கிடக்கின்றன!!

பாங்கிக்கோ 3% வீதம் வட்டி செலுத்தவேண்டும், வாங்கிய தொகைக்கு. 'என்ன செயவது?' என்று திகைத்துக்கிடக்கிற நேரத்தில், பத்திரிகையில் ஒரு செய்தி வருகிறது— அமெரிக்காவுக்கு மிளகுத்தேவையிருப்பதாக. உடனே, ஆசை ஏற்படுகிறது — மிளகை வாங்கி அனுப்பினால் லாபம் வருமென்று. கோச்சிக்கு 'போன்' செய்கிறார்—சரக்கு தாராளமாக வாங்கலாமென பதில் கிடைக்கவே, செல்லாராம் சேட், பழக்குலை கண்ட நரியாகிறார்! உடனே சரக்கை வாங்கிச் சேமிக்கவேண்டும்— இன்னும் பத்துநாள்போனால் விலை ஏறும் — கொள்ளை லாபம் கிடைக்குமென்று கனவு காண்கிறார். ஆசை, அதிகமாகிறது! பெட்டியைப் பார்க்கிறார் —கடலை விற்காததால் காலியாயிருக்கிறது அது. உடனே மெர்க்கெண்டையல் பாங்கிக்கு, 'போன்' செய்கிறார்—மானேஜரைக் கூப்பிட்டு "மேலும் கொஞ்சம் கடன் தாருங்கள்!" என்கிறார். மானேஜரும், எத்தனையோமுறை இவ்விதம் 'கடன்' தந்தவர்தான்! ஆனால் இன்று! சர்க்கார் பிறப்பித்த உத்திரவு, அவருக்குத் தடையாயிருக்கிறது. சங்கடத்தோடு சொல்கிறார் "முன்னைப் போல் தாராளமாக கடன் கொடுக்கக்கூடாது என்று சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே கடன் தருவதற்கில்லை. மேலும் ஒரு விஷயம்— வட்டிவிகிதத்தையும் 3½% ஆக்கியிருக்கிறார்கள்." தகவல், தலைமேல், இடியாக விழுகிறது, செல்லாராமுக்கு! திகைக்கிறார்! விழிக்கிறார்!!

**விருதுநகர்**

பருத்தி வியாபாரம் ராமலிங்க நாடாருக்கு, சர்க்கார் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் தெரிய வருகின்றன. பாங்கிகள்மூலம் கடன் தரப்படாததும் வட்டி விகிதத்தை உயர்த்தியிருப்பதும் தெரியவருகிறது. உடனே, யார் யாருக்கு பஞ்சுமூட்டைகள் அனுப்பினாரோ, அவர்களிடமிருந்து வரவேண்டிய நிலுவைகளை வசூலிக்க முற்படுகிறார். இப்படி நிலுவை தரவேண்டியவர்களில், செல்லாராமும் ஒருவர்.

---

## தோழர் டி. என். ராமன்

நமதியக்கத் தோழரும் நெடுநாளைய சுயமரியாதைக்காரருமான திருவாரூர் டி. என். ராமன் அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில்

## பம்பாய்

செல்லாராம், விழிக்கிறார்! திகைக்கிறார்! "பஞ்சு மூட்டைக்கான பாக்கியை அனுப்பு", "உளுந்து மூட்டைக்கான பணத்தை உடன் அனுப்பவும்", "கணக்கு முடிவு செய்ய வேண்டும்---பாக்கித் தொகைக்கு வழி செய்யவும்"—இவ்விதமாக விருதுநகரிலிருந்தும், திருச்சியிலிருந்தும், கோழிக்கோட்டிலிருந்தும் தந்திமேல் தந்தி வந்து குவிகிறது—கையிலோ பணமில்லை! பாங்கியோ கடன் தர மறுக்கிறது! கொள்முதலான பஞ்சும், கடலையும் மூட்டை மூட்டையாகக் கிடக்கின்றன! என் செய்வார்? ஒரே வழி, மூட்டை மூட்டையாகக் கிடப்பவைகளை வெளியே வியாபாரத்துக்கு அனுப்புவதுதான்! நேற்றுவரை, 'உளுந்து இல்லை' 'பஞ்சு இல்லை', 'கடலெண்ணெய் விலை தாங்கமுடியவில்லை' என்று கலங்கிக் கிடந்த மக்களை நோக்கி, 'உளுந்தும்', 'கடலை'யும் புறப்படுகிறது. மார்க்கெட்டுகளில், குவிக்கப்படுகிறது!

நேற்றுவரை, 'காணமுடியாமலிருந்த' இந்தப் பொருள்கள், இன்று ஏராளமாகக் கிடப்பதைக் காணும் மக்கள், 'இன்னும் குறையும்—வாங்கலாம்' என்று எண்ணுகிறார்கள். 'வாங்கவேண்டும் இப்போது' என்று ஆசைப்படுபவரோ, பையைப் பார்க்கிறார்கள்-காசில்லை!

* * *

கடந்த ஒரு வார காலமாக, நாடெங்கும் சொந்தளிக்கும், விலைவாசி இறக்கத்துக்குள்ள மூல காரணம், இது தான். வியாபாரிகள் திகைக்கிறார்கள்! பெரிய வியாபாரிகள் கலங்குகிறார்கள்! கலக்கம்—பெருமூச்சு—ஏக்கம், இத்தனையும், தினசரி, நாடெங்கும் பரவிக்கொண்டிருக்கிறது-வணிக மக்களிடையே.

'விலை இறங்குகிறதாமே!'

'பொருள்கள் சாதாரணமாகக் கிடைக்கிறதாமே!'

என்று ஆனந்தமும் ஆச்சரியமும் கலந்தோராய்க் காட்சி தருகிறார்கள், பொதுமக்கள்.

"இத்தனை நாளும் இல்லாமல் இப்போதுமட்டும் விலை குறைந்தது?" என்பதால், ஆச்சரியம், ஏற்பட்டிருக்கிறது, சராசரி மக்களிடையில்.

இந்த விலை இறக்கத்துக்கு, நாம் மேலே் தந்த விளக்கம்தான் முக்கிய காரணமாகும்.

பொருள்கள் குவிந்திருக்கின்றன, கடைகளில்!—கூறப்படுகிறது, மக்களால். ஏது, இவ்வளவுபொருள்களும்? உற்பத்தி பெருகி விட்டதா, திடீரென கடலையும் உளுந்தும், காப்பியும் சர்க்கரையும் பெருகிற்று, அல்லது காஞ்சி காமாட்சி கருணை பாலித்து மக்களுக்குத்தேவையான பொருள்களையெல்லாம் 'மாரி'யாகக் கொட்டிவிட்டாளா, என்பதை நாம் நன்றாகச் சிந்திக்கும்போது, விஷயங்கள் தெளிவாகும்.

நிறையபொருள்கள் உற்பத்தியானால், விலை குறையும்.

ஆனால், உற்பத்தி எப்போதும் போலத்தானிருக்கிறது; ஆனால் விலைமட்டும் குறைந்திருக்கிறது.

எப்படியேற்பட்டது, இது? மக்களுக்கு வேண்டியஅளவு தானியப் பொருள்களும், வாழ்க்கைப் பொருள்களும், உற்பத்தியாகாதது கண்முன்னால் தெரிகிறது. ஆனால் விலைமட்டும் இறங்கியிருக்கிறதே, எப்படி இது?

இந்தக் கேள்விக்குப்பதில் தான், நாம் மேலே தந்த விளக்கம். அதிக லாபம் பெறவேண்டுமென்ற ஆசையால், கொள்ளைலாபக்காரர்கள், மக்களுக்குத் தேவையான பொருள்களையெல்லாம் இது நாள் வரை பதுக்கிவைத்திருந்தார்கள்—ஆனால் இப்போது, மேலே தந்த விளக்கத்தின்படி, பதுங்கிக்கிடந்தது வெளியே வந்திருக்கிறது!

இவ்விதம் வெளிக்கு சரக்குகள் வந்ததற்குக் காரணம், நாம் குறிப்பிட்டதுபோல சர்க்கார் ஏற்றுமதி வரி விதித்ததும், வியாபாரிகளுக்கு முன்னைப்போல கடன் தராமல் பாங்கிகளைத் தடைசெய்ததும்தான்.

கடந்த நவம்பர்மாதம், வியாபாரிகளுக்கு பாங்கிகள் கடன் தருவது சம்பந்தமாக சில விதி முறைகளை, ஏற்படுத்தினார்கள்.

'அட்வான்சாக' முன்னைப்போல பணம் தரக்கூடாது.

வட்டிவிகிதம் 3 லிருந்து 3½ ஆக இருக்கும்.

புதிதாக கடன்வாங்குவோருக்கு சில நிபந்தனைகள் உண்டு.

இந்த நடவடிக்கையும், ஏற்றுமதிவரி உயர்த்தப்பட்டதும், வியாபாரிகளைக் கலக்கத்திற்குள்ளாக்கிற்று. திகைத்தனர்!


எனினும், பல்லைக் கடித்துக் கொண்டு, 'புது பட்ஜட் எப்படி இருக்கிறது—ஏற்றுமதி வரி குறைக்கப்படுகிறதா?' என்று ஆசையோடு பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால் புது இந்திய சர்க்காரின் பட்ஜட்டில் இந்த வரி குறைக்கப்படவுமில்லை—பாங்கி விதிகள் தளர்த்தப்படவுமில்லை. இதைக்கண்ட வியாபாரச் 'சூதாடிகள்' கலக்கமடைந்தார்கள்! சர்க்காரின் போக்கைக்கண்ட, ஆங்காங்குள்ள மொத்த வியாபாரிகள், தத்தமது சரக்குக்கானபணத்தைத் தருமாறு, 'வியாபாரச் சூதாடி' (Speculators)களை நிர்பந்திக்கத் துவங்கினர் — சரக்கு, மார்க்கெட்டுக்கு வரவேண்டியதாயிற்று!

* * *

சரக்கு, நிறம்பியிருக்கிறது,கடைகளில்; ஆனால் வாங்குவாரில்லை! வாங்கலாமென்று ஆசைப்பட்டாலோ, கையில் காசில்லை!!

விசித்திரமான காட்சியாகத் தோன்றும், இது. மக்கள் மன்றத்தில், கடைகளிலே குவிந்துகிடக்கும் பொருள்களை வாங்கவேண்டும் என்ற ஆவலில்லை. மக்களுக்குத் தேவையில்லையோ இந்தப்பொருள்கள் என்று பார்த்தால், யாவும் தேவைதான்! ஆனால் வாங்கவில்லை!

வாங்கும் சக்தி (Purchasing



Power) குறைந்திருக்கிறது—மக்களிடம். பணப்புழக்கம் இல்லை!

பணப்புழக்கம் இல்லை மக்களிடம் ஆனால், சர்க்காரோ பணவீக்கம் நாட்டிலிருப்பதாகக் கூறுகின்றனர். அதற்குக் காரணமாகத் தாங்கள் அச்சடித்து வெளியிட்ட கரன்சி நோட்டுகளின் கணக்கைக் காட்டுகின்றனர்.

உண்மையில் கடந்த போர்க்காலத்தின்போது, ஏராளமான பணப்புழக்கம்—ஏற்பட்டது, மக்களிடம். நோட்டுகள் தாராளமாகநடமாடின—பொருள்கள் கிடைக்கவில்லை!—கள்ளமார்க்கெட், கொள்ளை லாபமிருந்தது. சிலர்,கோடீசுவரர்களான காட்சியைக் கண்முன் கண்டோம்! பணம், முதலாளிகளின் பெட்டிக்குள் குவிந்தது! கிட்டதட்ட 500 கோடிக்கு மேற்பட்ட ரூபாய்கள், 'பதுங்கி' விட்டன!!

பதுக்கப்பட்ட பணத்தை எடுக்க சர்க்கார், சரியான முயற்சிகளைக் கைக்கொள்ளவில்லை. "கள்ளமார்க்கட்காரரை தூக்கிலிடுவோம்!" "வருமான வரியை சரியாக செலுத்துங்கள்" "மூலதனம் போட்டு ஆலைகளை ஆரம்பியுங்கள்" என்று நேரு ஆட்சியினர் வெளியிட்ட தந்திரசாகசங்கள், எதுவும் பயனளிக்கவில்லை! பண அரசர்கள் வளரத்தான் செய்தனர்! 'கருப்பு பணம்' பலவிதங்களில் நடமாடத் துவங்கிற்று!!

இந்த உண்மையை உணர்ந்தும், சர்க்கார் பணமுதலைகளிடம் பதுங்கிய பணத்தை வெளிக்கொணர—சரியான நடவடிக்கை எடுக்கவில்லை.

அண்மையில், பட்ஜட்டைச் சமர்ப்பித்துப் பேசிய நிதிமந்திரி தேஷ்முக் பேசுகையில், பண வீக்கத்தைக் குறைக்க சர்க்கார் மேற்கொண்ட நடவடிக்கைகளை சொன்னார்.

அவர் குறிப்பிட்ட விவரத்தில் முக்கியமானது, "மக்களிடமிருந்த வாங்கும் சக்தி, சர்க்காரிடம் சேர்ந்திருக்கிறது" என்பதாகும்.

அதாவது, அமெரிக்கா கடனாக—பணம்பெறாமல்—கோதுமை அனுப்பிற்றல்லவா! அதை, சர்க்காரே விற்றார்கள்—வாங்கிய மக்கள் கோதுமைக்கு விலை கொடுத்தே பெற்றார்கள். அப்படி மக்கள் கொடுத்த பணம்தான், இந்த ஆண்டு வரவு செலவில், மிச்சம் ஏற்படச் செய்திருக்கிறது! இந்த மிச்சத்தில் ஒரு பகுதி, மக்களிடமிருந்து கோதுமை விற்பனைமூலம் கிடைத்த பணம் தான்!!

இந்த மிச்சத்தைப் பெருமிதமாகக் குறிப்பிட்ட நிதி அமைச்சர், பதுங்கிய பணத்தைப் பற்றி எதுவும் கூறவில்லை—பதுங்கிய பணம் வெளிவரவில்லை, இன்னும்.

பண வீக்கத்தைக் குறைக்கும் நோக்கத்தோடுதான், பாங்கிகளின் வட்டி விகிதத்தை 3%லிருந்து $3\frac{1}{2}$% ஆக உயர்த்தியதாகக் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கை ஓரளவு பயன் தரக்கூடியதுதான். பாங்கிகளிலிருந்து, பணம் 'வியாபாரச் சூதாடிகள்' கைக்குப் போகாது — அவர்கள் மூலம் வெளியே பரவாது—அதே நேரத்தில், சூதாடிகளின், கொள்ளை லாப நடவடிக்கைகள் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதன் விளைவையே, இன்று நாம் பார்க்கிறோம்!

* * *

விலைவாசிக் குறைவை, நினைக்கும்போது இந்தியாவில் என்று மட்டுமல்ல; அகில உலகிலுமே வியாபார மந்தம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஐந்தாறு மாதங்களாகவே, உலக மார்க்கெட் மந்தமாயிற்று — பொருள் விலைவாசிகள் குறையலாயின! காரணம், வெளிநாடுகளிலுள்ள முதலாளிகள், கொரியப் போரையும், எகிப்துக் கிளர்ச்சியையும், ஈரான் எண்ணெய்த் தகராறையும் கண்டு, சரக்குகளைக் குவித்தார்கள்—அதிக லாபம் பெறலாமெனும் ஆசையால்! ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக,

(11-ம் பக்கம் பார்க்க)

---

இந்திய அரசியலமைப்பைப்பற்றி, உலக நாடுகளின் அரசியலமைப்பு அறிஞரும், இலங்கை பல்கலைக் கழகத்துணைவேந்தருமான ஐவார் ஜென்னிங்ஸ் வெளியிட்டிருக்கும் கருத்துக்களில் சில:—

"இந்திய அரசியலமைப்பில், வடக்கேயுள்ள இந்துக்கள்வசமே அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது."

"சிறுபான்மையோரின் கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன."

"வகுப்புகளின் கோரிக்கைகளை இவ்விதம் கவனிக்க மறுத்ததால் தான் பாகிஸ்தான் ஒரு தனி ராஜ்யமாக ஏற்பட நேர்ந்தது என்பதை சரித்திரம் சொல்லும்."

"மாகாண சர்க்கார்களின்மீது அளவுக்கு மேற்பட்ட அதிகாரம் செலுத்துவதாக இந்திய அரசியலமைப்பின் பிரிவுகள் இருக்கின்றன."

"256, 257 ஷரத்துகளின்படி அரசியல் விவகாரங்களில் யூனியன் சர்க்கார் தலையிடலாம்."

---

## சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரத் தோழர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிட்டவைகளை கவனத்தில் கொள்ளக் கோருகிறோம்:

1. கடிதம், மணியார்டர் முதலியவைகளில் தவறாது சந்தா எண்ணைக் குறிக்கவும்.
2. முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.
3. ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப் பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள். இல்லையெனில் குறிப்பிட்ட தேதியோடு பத்திரிகை நிறுத்திவிடப்படும்.

மேனேஜர்.

திராவிடநாடு

காஞ்சி] 16—3—52 [ஞாயிறு

# டில்லி

## பலமான

# ஏகாதிபத்யம்

"ஏதோ, சொல்கிறார்கள்!"

"வேண்டுமென்றே கூறுகிறார்கள்"

"வேறு வேலை ஏது — வடக்கு தெற்கு என்று பேசுவதைத் தவிர?"

"துடுக்குத்தனம் – துள்ளுகிறார்கள்!"

* * *

வடக்கு வாழ்கிறது! தெற்கு தேய்கிறது!! — என்று, காரணங்களோடு நாம் காட்டினாலும், ஏற்பதில்லை—இங்குள்ள தேசீய நண்பர்கள். உருட்டும் விழிகளையும், மிரட்டும் குரலையும், கேலியையும் கிண்டலையும் வீசத் தவறுவதுமில்லை. அவர்கள் சிந்தனைக்கு ஒரு சிறு குறிப்பு:—

இந்திய அரசியலமைப்புப்படி அதிகாரங்கள் வடக்கே உள்ள இந்துக்கள்வசமே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

(A Constitution which vests control in the Hindus of the North)

* * *

சென்னை பல்கலைக் கழக மண்டபத்திலே, கற்றோரும் கற்போரும் கூடியிருக்க, அவர்கள் மத்தியிலே ஒருவர் வெளியிட்டது, இது. ஒருவர் என்றால், இங்கேயே இருந்து, இங்கு நடைபெறும் அரசியல் காரியங்களை, அடிக்கடி கவனித்துக் கொண்டிருப்பவரல்ல. வெளிநாட்டார்! இலங்கைத் தீவைச் சேர்ந்தவர். தி. மு. க. பிரச்சாரத்துக்காக அழைத்துவரப்பட்டவரல்ல—அல்லாடி அய்யரின் சஷ்டியப்தபூர்த்தி தர்ம ஸ்தாபன நிதியை யொட்டி 'பிரசங்கம்' செய்ய தருவிக்கப்பட்டவர், ஐவார் ஜென்னிங்ஸ். இலங்கைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்—அரசியலமைப்புச் சட்டங்களிலே 'தீர்ப்பு' வழங்குமளவு தெளிவும் அறிவும் பெற்றவராம் — 'இந்து' தெரிவிக்கிறது!— அவர் கூறியிருக்கிறார், கடந்த 4, 5 6 தேதிகளில் 'இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சில அம்சங்கள்' என்ற தலைப்பில் பேசும்போது.

அந்நியர், அவர்—அரசியல் சட்டங்களிலே தெளிந்த ஞானமும், விரிந்த அறிவும் பெற்றவர்—அவர் சொல்கிறார்—வடக்கே உள்ள இந்துக்கள்வசம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன – எவ்விதம்? இந்திய அரசியலமைப்புமூலம்!

* * *

சுயராஜ்யம் மலர்ந்து, அதிகார மாற்றம் டில்லி மூலவர்கள் கைக்கு வந்து, புது இந்திய அரசியலமைப்பு தயார் செய்யப்பட்டு, அது அமுல் நடத்தப்பட்டுவரும் இந்த நேரம் வரை—நாம் இந்த உண்மையை எத்தனையோ முறை, எடுத்துக்காட்டி வந்துள்ளோம்.

டில்லி ஏகாதிபத்தியமாகிறது— அதற்கான வகைகளில் தனக்கான அதிகாரங்களைக் குவித்துக்கொள்கிறது—என்று நாம் தெரிவித்தபோதெல்லாம், சீறினர், பாய்ந்தனர்— பிரிவினை பேசும் பித்தர்கள் என்றனர்—தூற்றுவதே இவர்தம் வேலை என்றனர். இப்போது ஜென்னிங்ஸ் சொல்கிறார்--அரசியலமைப்புகளில் சிறந்த ஞானமும், தெளிந்த அறிவும் உடையவராம்—சென்னை நீதிபதி ராஜமன்னார் பாராட்டுகிறார், அவரை—அவர் கூறுகிறார்,

சிறுபான்மையோரின் கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன—புது அரசியல்மூலம்.

எல்லோருக்கும் பாதுகாப்பு தரப்பட்டிருப்பதாக, மார்தட்டி- கர்ஜனை எழுப்பிய காங்கிரஸ் தோழர்களே—கவனியுங்கள், ஜென்னிங்ஸ் தரும் விளக்கத்தை:

"மதத்தின் மூலமாகவும் இனவாரியாகவும், இங்கேஇருக்கிற பாகுபாடுகளையும், பிரிவுகளையும் வெளியார் கண்களுக்கு படாமல் மறைக்க வேண்டுமென்பதில், (Congress Polictiians) காங்கிரஸ் தலைவர்கள் அக்கறை காட்டி வந்ததால், சிறுபான்மை மக்களின் முக்கியத்துவத்தையும், நலன்களையும், கருத்துக்களையும் வேண்டிய அளவு கவனிக்கவில்லை — குறைத்தே காண்பிக்க விரும்பினர். வகுப்புகளின் கோரிக்கைகளை, இவ்விதம் கவனிக்க மறுத்ததால்தான், பாகிஸ்தான் ஒரு தனி ராஜ்யமாக ஏற்பட நேர்ந்தது என்பதை சரித்திரம் சொல்லும்.

ஆகவே, இந்திய அரசியலமைப்பில், அவர்களுக்கான பாதுகாப்பு அளிக்கப்படாததால் ஏற்படும் விளைவுகளை நம்மால் கூறமுடியாது— பெரும்பான்மையோர் எப்படி தங்கள் ஆதிக்கத்தை சிறுபான்மையோர்மீது செலுத்துகிறார்கள் என்பதில்தான் இருக்கிறது.

பலதரப்பட்ட மாற்று உள்ளம் கொண்ட மக்களைக் கொண்டநாடு, முள்ளின்மேல் இருப்பது போன்றதாகும்"

சிறுபான்மை மக்களின் கோரிக்கைகள் கவனிக்கப்படவில்லை — வகுப்புவாரியாக வாழும் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படவில்லை— புது இந்திய அரசியலமைப்பில். விளக்குவது, நாமல்ல; ஜென்னிங்ஸ்!

ஏன், கவனிக்கவில்லை, யென்பதைப் பற்றியும் அவர் விளக்கம் தந்திருக்கிறார் — "காங்கிரஸ் தலைவர்கள், பலதரப்பட்ட மக்கள் இங்கே வாழ்கிறார்கள் என்று வெளியாருக்குக் காட்டவே விரும்பவில்லை." இந்த விருப்பம் ஏன் ஏற்படவில்லை? — இந்தக் கேள்வியில் இந்தியத் தலைவர்களின் எண்ணம் பதிந்து கிடக்கிறது.

பல இனத்தவரும் மதஸ்தரும் வாழும் பூமியாக இதைச் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை! — அதாவது இந்தியாவை ஒரே நாடு–இங்கு வாழ்வோரெல்லாம் ஒரே மக்கள்— இந்தப் போலியை விரும்பினர்!

இந்த உண்மையைச் சுட்டிக்காட்டும்போது, எரிந்து விழுவீர்களே நண்பர்களே, என்ன சொல்கிறீர்கள் இப்போது? ஜென்னிங்ஸ் கூறுகிறார் —ஏராளமான நூல்களை அரசியல் உலகுக்குத் தந்தவராம் — நீதிபதி ராஜமன்னார் புகழ்கிறார்; அவர் கூறுகிறார்!

* * *

வடநாட்டு இந்துக்கள்
அதிபதிகளானார்கள்
பல இன—வகுப்புகளின்
நலன்கள் காக்கப்படவில்லை.

இந்த உண்மைகளை, இந்திய அரசியல் சட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் அலசிக் காட்டி, விளக்கங்களோடு, வெளியிட்டிருக்கும், பல்கலைக் கழகத் துணைவேந்தர்—இன்னும் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்—டில்லி வகுத்த இந்திய அரசியலமைப்பு முறை பற்றி. ஜென்னிங்ஸ், இங்கேவந்து சென்ற நிகோலாஸ் அல்ல; 'இந்து' அவரைப்பற்றி, குறிப்பெழுதுகிறது, சிறந்த அறிஞர் என்று. மயிலை வாசிகள் அவரது பேருரையைக் கேட்க மகிழ்ந்தே அழைத்திருக்கிறார்கள் — 'இவரது கருத்துக்களைக் கேட்கும் பெரியதோர் சந்தர்ப்பத்தை அமைத்துத்தந்த சென்னை பல்கலைக் கழகத்தாரைப் பாராட்டுகிறேன்' என்று பெருமிதத்தோடு சொல்லுகிறார் நீதிபதி ராஜமன்னார். அத்தகைய புகழ்மாலைகள், அந்த வட்டாரத்தால் சூட்டப்படும் ஜென்னிங்ஸ்பேசியிருக்கிறார் எனின் அந்தக் கருத்துக்களைச் சாதாரணமானதென்றா கூறமுடியும்? நாம்—தெரிவித்தால், 'தெரியாததுகள்—வகுப்புவாதிகள் — துவேஷிகள்—விதண்டாவாதம் செய்பவர்கள், இப்போது பேசுவது, ஜென்னிங்ஸ்! கேளுங்கள், அவர் பேசிய சில வார்த்தைகளை!!

"முடியாட்சி முறையின் அடிப்படையிலேயே இந்திய அரசியலமைப்பு அமைந்திருக்கிறது. சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்ட அரசனைப்போல ஜனாதிபதி இருக்கிறார்"

"அடிப்படைச் சுதந்திரங்கள், அடிப்படை உரிமைகளாக மாற்றப்படவில்லை"

"முக்கியத்துவம் தரப்படவேண்டிய, வகுப்புப்பிரச்சினைகள் போன்றவைகள், இந்திய அரசியலமைப்பில் இடம்பெறவில்லை. ஆனால் சட்டமூலம் செய்யவேண்டியதான மொழிப் பிரச்னை அரசியலமைப்பிலே ஏற்றப்பட்டிருக்கிறது"

* * *

முக்கியமானவைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன, ஆனால் சாதாரணமானவைகள் முக்கியமாகக் கருதப்பட்டிருக்கின்றன--ஜென்னிங்ஸ் இதற்கு ஆதாரமாக 'மொழிப் பிரச்னையை'க் காட்டுகிறார். மொழிப் பிரச்சினை எது? இந்தி மொழி அரசியல் மொழியாக ஆக்கப்படவேண்டும் என்று ஆக்கப்பட்டிருக்கிறதே—அதுதான்! அதைத்தான் குறிப்பிடுகிறார்!!

'ஏன், இந்திக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்—மொழி ஏகாதிபத்தியத்தைப் புகுத்துகிறீர்களே!' என்று, நாம் கேட்டோம். தடிகளையும் துப்பாக்கிகளையும் பரிசாகப் பெற்றோம்—ஏளனங்கள் வீசப்பட்டன, காங்கிரஸ் நண்பர்களால். இப்போது, அந்நியர் ஒருவர் சொல்கிறார்—அரசியலமைப்பைப்பற்றிய உண்மைகளை 'அலசுபவர்' சொல்கிறார்!!

* * *

ஜென்னிங்ஸ், மாகாணங்களுக்கும் மத்தியசர்க்காருக்குமிடையே, புது இந்திய அரசியலமைப்பு மூலம் ஏற்பட்டிருக்கும் நிலை பற்றிக் குறிப்பிட்டிருப்பதை, இங்குள்ளோர், கவனத்துக்கு வைக்க விரும்புகிறோம் — நாம் கூறினால் தான், 'நாட்டுத் துரோகி' என்பர்! விதண்டாவாதிகள் என்று வெறுப்பரே!

"மாகாணங்கள், சாதாரணமாக ஒரு காரியத்தையும் செய்ய முடியாது லெஜிஸ்லேடிவ் கவுன்சில் அவசியமில்லையென ஒரு மாகாணம் விரும்புகிறது என்று வைத்துக் கொள்வோம். அது உடனே, தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாது. யூனியன் பார்லிமெண்டு தான் செய்யலாமென (இ. அ. ச. 169 பிரிவு) இருக்கிறது"

"இதைப்போல எவ்வித மாற்றங்களும் அரசியலமைப்பைத் திருத்தித்தான், மாகாணங்கள் பெற முடியும்"

"மாகாண சர்க்கார்களின் மீது அளவுக்கு மேற்பட்ட அதிகாரம் செலுத்துவதாக இந்திய அரசியலமைப்பின் பிரிவுகள் இருக்கின்றன"

"எல்லா மாகாண அமைப்புகளும், தங்களுடைய காரியங்களை கவனிக்குமளவுக்கு . பலவீனமாயிருக்குமென ஏன், சந்தேகிக்க வேண்டும்?"

கேட்கிறார், அவர். மாணவர்களும், சட்ட வல்லுநரும், பிரமுகர் பலரும் கூடியிருந்தமண்டபத்திலே இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். சாதாரணமாகவல்ல வெளிநாடுகளின் அரசியலமைப்புகளைக் காட்டிக் கேட்டிருக்கிறார்!

"மத்தியசர்க்காருக்கு அதிகாரங்கள் இருக்கவேண்டாமோ; இருந்தால்தானே, அது, பலம்வாய்ந்ததாக இருக்கமுடியும்?" என்று டில்லியை ஆதரித்துப் பேசுவீர்களே, நண்பர்களே, அதற்கும் அவரது, விரிவுரையிலே விளக்கம் இருக்கிறது.

இந்தியாவைப் போல, அமெரிக்க ஐக்கியக் குடியரசுக்குள்ளும் பற்பல ராஜ்யங்கள் இருக்கின்றன—ஆஸ்திரேலியாவிலும் உள்ளன. ஆனால் அங்கே, உள்ள அரசியலமைப்பு, ராஜ்யங்களைவைத்து அமைக்கப்பட்டதாகும். ஆனால் இங்கே! மத்தியசர்க்காரைவைத்துமாகாணங்களின் 'தலைவிதி' நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது!

"கூட்டாட்சி பார்லிமெண்டுக்கெனச் சில முக்கிய அதிகாரங்களும், மிச்ச அதிகாரங்கள் மாகாணங்களுக்கும் இருப்பதுதான், அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் நடைமுறையிலிருப்பதாகும்."

இங்கே—இதுவா, இருக்கிறது? இல்லையென்றால், ஏன்—ஏன், மாகாணங்களுக்கான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை? என்ன காரணம் இதற்கு?—சொல்லுவீர்களா! தென்படுகிறதா!!

* * *

மாகாணங்களுக்குள்ள அதிகாரங்களை டில்லி, 'எடுத்துக்கொண்டது மட்டுமல்ல, தன் இஷ்டத்துக்கு மாறாக, எப்போதும் மீறிச் செல்ல முடியாதவாறும், தக்க சட்டங்களை ஆக்கி வைத்திருக்கிறது — இதை

## பிறப்பு

நடிகத் தோழர் எஸ். எஸ். சிவசூரியன் 3—3—52 அன்று ஆண் மகவொன்றுக்குத் தந்தையானார் என்கிற செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறோம்.

நாம் சொன்னோம் முன்பு! இப்போது—போற்றப்படுகிற அரசியல் அறிஞர் சொல்லுகிறார்!!

“நிரந்தரமான இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மாகாணங்களுக்கென அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைத் தவிர, வேறெதுவும், மாகாணங்களால் செய்யமுடியாது. அப்படி மாகாணங்கள் விரும்பினாலும், திருத்தப்பட முடியாதபடி, அவ்வளவு கஷ்டசாத்தியமாக்கப்பட்டிருக்கிறது”

ஏன், இது! சிந்தித்தீர்களா? அதிகாரம் கொடுக்கப்படவில்லை — கொடுத்த அதிகாரத்துக்கு மேலாக இன்னும் அதிகாரம் பெற வழி செய்தும் தரப்படவில்லை - மாறாக, வழி கஷ்ட சாத்யமாக்கப்பட்டிருக்கிறது!

திருத்த வேண்டுமென பார்லிமெண்டுக்குச் சென்றாலும், எளிதல்ல; வேறு முறையில் அதிகாரத்தைப் பெற முயன்றாலும் முடியாது — ஆமாம்! மாகாணங்கள், எவ்வளவு முயன்றாலும், சர்க்காரை ஏற்று நடத்துவோர், ஆசைப்பட்டாலும், அது மத்ய சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டு, மத்ய பீடம் இசைந்தால்தான் முடியும்—பார்த்தோமே, இதை கம்யூனல் ஜி. ஓ. விஷயத்தில்!

இந்தத் தடைகளைப் பற்றி, ஜென்னிங்ஸ், விளக்கமாகக் குறிப்பிடுகிறார்.

“248 ஷரத்துப்படி மாகாணங்கள் மத்தியபார்லிமெண்டுக்கு, எதிராக எதுவும் செய்ய முடியாது. மாகாணம் ஒரு சட்டம் செய்தால், அது பார்லிமெண்டுக்கு அடங்கியதாகவே இருக்கவேண்டும்”

இத்தகைய, கட்டுப்பாடுகளோடு, இந்திய அரசியலமைப்பைச் செய்திருக்கிறார்கள்—டில்லி மூலவர்கள். ஏன் இவ்வளவு சட்ட திட்டங்கள்! எதற்காக இத்தனை அப்சங்கள்!!

“மாகாணங்கள் அடிமைப்படுத்தப் பட்டிருப்பதைக் காட்டும் அநேக அம்சங்கள் இருக்கின்றன. எல்லா வகையிலும் யூனியன் சர்க்காரின் அதிகாரமே செல்லுபடியாகும்”

* * *

மாகாணங்களின் ‘சுதந்திரம்’ விலங்கிடப்பட்டிருக்கிறது —இந்திய அரசியலமைப்பால். இஷ்டம்போல உலவ முடியாதபடி கட்டுகள்! கண்ணுக்கு—காதுக்கு—கைகளுக்கு—வாய்க்கு—கால்களுக்கு!!

இவ்வளவு. அதிகாரங்களை,சுரண்டிக்கொண்டதுமட்டுமல்ல.

“256, 257 ஷரத்துக்கள் படி, அரசியல் விவகாரங்களில் யூனியன் சர்க்கார் தலையிடலாம்.”

இந்த அம்சத்தை, ஜென்னிங்ஸ் சுட்டிக்காட்டி, ஒரு சந்தேகத்தை எழுப்புகிறார்! அந்தச் சந்தேகம், இன்று நம்மிடையிலே பலருக்கேற்பட்டிருப்பதுதான்— அதை அவரே கூறுகிறார்.

“மாகாணத்தில் காங்கிரசல்லாத சர்க்காரும், மத்திய சர்க்காரில் காங்கிரஸ் காரருடைய சர்க்காரும் இருக்கவேண்டிய நிலை வந்துவிடுவதாக வைத்துக் கொள்வோம், அப்போது, இரண்டுக்கும் தகராறு ஏற்படாமலா போகும்?”

‘ஆமாம்! ஏற்படலாம்’ என்பீர்கள். அப்போது, டில்லி, என்ன நடவடிக்கையெடுக்கும் என்பதை நாமும் அறிவோம்—எனினும், அவர் என்னகூறுகிறார், கேளுங்கள்

“அப்போது, தன் கட்டளையை மதிக்காதமாகாணத்தின்மீது,மத்திய சர்க்கார், தன் அதிகாரத்தைப் பிரயோகிக்கத்தான் செய்யும். சட்டத்தை மதிக்கவில்லையென்று,மாகாணத்தின்மீது, மத்திய சர்க்கார் (Contempt of Court) வழக்காதொடரும்? கவர்னரைக்கொண்டு, மந்திரிகளை, விலக்கும்படிதான் செய்யும்”

இவ்வளவு முன்ஜாக்கிரதையோடு மாகாணங்களின் உரிமைகளை,டில்லி மூலவர்கள் பறிக்கவேண்டிய காரணம் என்ன? ஆஸ்திரேலியாவில் இல்லாதது, கானடா நாட்டின் அரசியலமைப்பிலே காணமுடியாத அளவு, அமெரிக்கநாட்டிலே நடைமுறையிலே இல்லாத அளவு, இவ்வளவு வலிவுள்ளதாக ஏன் டில்லிபீடம் இருக்கவேண்டும்! நம்மிடத்திலேயிருந்து, வரிகளை வாங்கிச் செல்லும், டில்லி-‘நேரடியாகவோ, மறைமுகமாகவோ வரி விதிக்கும் அதிகாரங்கள் மத்தியசர்க்காருக்கும் உண்டு’ எனசட்டத்தைப் பெற்றி ருக்கும் டில்லி, ஏன் இவ்வளவு அதிகாரங்களைச் சேர்த்துக்கொண் டிருக்கிறது! என்ன காரணம்?

* * *

டில்லி ஒரு ஏகாதிபத்தியமா றது!—என்ற நமது குற்றச்சாட்டை அலட்சியமாகக் கருதுவோரைப் பார்த்துக் கேட்கிறோம் — சிந்தித் துப்பாருங்கள், இப்போதாவது.

டில்லி முக்கியமானபிரச்சினைகளை ஒதுக்கியது—

தனதுமொழிப்பிரச்சினையைசட்ட மாக்கிக்கொண்டது—

மாகாணங்களின் உரிமைகளை பறித்துக்கொண்டது—

மீறி நடக்காமல், சட்டவேலியை அமைத்துக்கொண்டது—

இஷ்டம்போல் உத்திரவு பிறப் பிக்கலாம்—

கீழ்ப்படியாவிடில் மாகாண சர்க் காரை நீக்கலாம்—

இந்த நிலையில் இருக்கிறோம் நாம் அல்ல! அல்ல!!—இருக்கும்படிச்செய் யப்பட்டிருக்கிறோம், டில்லி மூலவ ராலும், அவருக்கு ஒத்துழைக்கும் அல்லாடி போன்ற சட்ட நிபுணர் களாலும். ஏன், இவ்வளவு ஆசை யிருக்கவேண்டும்—டில்லியினருக்கு! என்ன காரணம் இத்தகைய சட்ட அமைப்பை ஆக்கிக் கொண்டதற்கு சிந்தியுங்கள்—தென்படும், எவ்வள பயங்கரமாக உயர்ந்திருக்கிறது டில்லி என்று. இப்போதுசொல்லுங் கள்—டில்லி எது! எத்தகைய டில் ஏற்பட்டிருக்கிறது!!

★

## “ஞாயிறு”

தஞ்சை — கரந்தையிலிருந் வெளிவரும் ‘ஞாயிறு’ இத சொந்தத்தில் அமைக்கப்பட்டுள் அச்சகத்திலிருந்து 15—3—5 முதல் வெளிவரும் என்பதை தோழர் ஏ. கே. வேலன் தெரிவி துக் கொள்கிறார்.

## அறிவிப்பு

பலமுறை, எச்சரிக்கை விடுத்தும், சி. என். ஏ வின் எழுத்துக்களையும், பேச்சுக்களையும், தவறான முறையில், நூல் வடிவங்களாக்கி விற்பனை செய்யும் பழக்கம் தொடர்வதாக அறிகிறோம்.

இவ்வித முறையால், பலர் தமது விருப்பம் போலெல்லாம் கருத்துக்களைக் கூட்டியும், குறைத்தும் நூல்களாக்கி விடுகின்றனர் — இதனால் மிக மிக மனச் சங்கடத்தை உண்டாக்கி விடுகின்றனர். மக்கள் மத்தியில் பரவும் நூல்களைக் கவனித்து வெளியிட வேண்டுமென்னும் கவலையும் சிரத்தையுமில்லாது, புத்தகங்களை வெளியிடும் பழக்கம் மிகவும் தீமை பயப்பதாகும்.

எனவே, பலமுறை அறிவித்தும், இந்தப் பழக்கத்தை விடாமல், தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் சிலர் மீது, வழக்கறிஞர்கள் மூலம், நடவடிக்கைகள் எடுப்பதென்கிற முடிவுக்கு வந்துள்ளோம்.

'திராவிட நாடு' இதழில் அறிவிக்கப்படாத எந்த நூலும், சி. என். ஏ விடம் காட்டியோ, இசைவுடனோ வெளியிடப்படாத நூல்களென்பதை தோழர்கள் தெரிந்துகொள்ள வேண்டுகிறோம்.

நமது பார்வைக்கு அனுப்பப்பட்டோ, அனுமதி பெற்றோ, பிரசுரிக்கப்படாமல், சி. என். ஏ வின் பெயரோடு வெளியிடப்படும் நூல்கள் பற்றி, கண்டிப்பாக, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நிர்வாகி,
"திராவிட நாடு"

---

## பம்பாயில்!

மார்ச்சு 15, 16 தேதிகளில் நடைபெற விருக்கும் பம்பாய் தி. மு. க. ஆண்டுவிழாவில் தோழர் இரா நெடுஞ்செழியன் M. A., சத்தியவாணிமுத்து அம்மையார் ஆகியோர் கலந்துகொள்வர்.

# உணரவேண்டும்

★

சென்னை கவர்னர் பதவியேற்ற அன்று, சர்க்கார் விருந்து மண்டபத்துக்கெதிரில், திராவிடகழக நண்பர்கள் பலர் கருப்புக்கொடி காட்டி திராவிடத்தின் அதிருப்தியைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கருப்புக்கொடி பிடித்து, தமது அதிருப்தியைக் காட்டிக்கொள்வது, குற்றமானதல்ல — மக்களுக்குள்ள உரிமைகளில் ஒன்றாகும் என்பதை நாம் பல முறை எடுத்துக் காட்டி வந்துள்ளோம்.

விரும்பத்தகாத நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொள்ளுகிறதென்றாலும், மக்களுக்கு நன்மையேற்படாத சட்டங்கள் பிறப்பிக்கப்படுகிறதென்றாலும், அதை எதிர்த்து தமது அதிருப்தியைக் காட்டிக் கொள்ளும் உரிமை வெளிநாடுகளில் இருக்கிறது.

மக்கள், ஆர்ப்பாட்டம் செய்வதா, என வெகுண்டு, அதிருப்தி கொண்டோர்மீது தடியையும் குதிரைப் பட்டாளத்தையும் ஏவிவிடும் துணிவும், முறையும் ஆங்காங்கே கையாளப்படுவதில்லை.

கவர்னர் பதவியேற்ற அன்றைய தினம், மவுண்ட்ரோட்டில் கருப்புக் கொடி பிடித்த தோழர்கள்மீது, காங்கிரசாட்சி. வழக்கம்போல, தடிகளை வீசி, அவர்களைத் தள்ளிக் கொண்டுபோய் காவலில் வைத்து, பிறகு விடுதலை செய்திருக்கின்றனர். தாய்மார் பலரும் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

இங்கே, தமது கொடுமை ஆட்டங்களை காங்கிரசார் நடத்திக்காட்டிய, அதே தினம் லண்டனில் ஒரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது—சர்ச்சில் சர்க்காரை எதிர்த்து. பிரிட்டிஷ் சர்க்காரின் பட்ஜட் திட்டத்தின்மூலம், ஏழைகளுக்கு நன்மைகள் இல்லையென்பதற்காக, மக்கள், பார்லிமெண்டுமுன் கூடி, ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்.

'பட்ஜட்'டிற்காக, ஆர்ப்பாட்டம்! ஆனால், தமது அதிருப்தியைவெளியிட்ட, பிரிட்டிஷ் மக்கள்மீது, தடியும் குதிரைப்பட்டாளமும் அங்கே [illegible]ணத்தைத் தெரிவிக்கும் உரிமை, அங்கு, அவ்விதம்! ஆனால் இங்கோ!

தடியடி — காவல் — கொடுமை, இத்தனையும் வழங்கப்படுகிறது. அன்றையதினம் தோழர்கள் எம். கே. தங்கவேலர், ஆற்காடு இளங்குப்பன், ஜே. சாரோன், சந்திரன், பி. வேலாயுதம், சம்பந்தம், எம். மொய்தீன் ஏ. ஜே. பால், இ. ஆறுமுகம், பி.இ. பக்தவத்சலம், லட்சுமி அம்மை, பாப்பம்மாள், நாகரத்தினம் அம்மை, சுப்பையா, முனுசாமி, அண்ணாமலை, பாலசுந்தரம், டி.என். காளியப்பன், கேசவன், எம். கே. டி. சுப்பிரமணியம், லோகநாதன், சண்முகம், முனுசாமி, புதுமைப்பித்தன், ரமணி, மணி, வேனுசாமி, பன்னீர்செல்வம், வீராசாமி, சுப்ரமணியம், நடராசன், ஏழுமலை, ஜோதிலிங்கம், சுவாமிநாதன் முதலிய தோழர்களை, கவர்னர் செல்லும்வரையில், காவலில் பிடித்து வைத்திருக்கிறார்கள். இவர்களிலே பலர், வெளியூரைச் சேர்ந்தவர்கள்—வேடிக்கைப் பார்க்கவந்த மக்களும் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இங்கே, உரிமைக்கு இவ்வளவு மதிப்பு தரப்படுகிறது — சர்க்காரால். தோழர்கள் ஏந்தும், தடியடிகள், இலட்சியமுழக்கத்தை இன்னும் ஓங்கச் செய்யுமேயொழிய — அடக்கிவிடாது. இதை உணர வேண்டும் அடக்குமுறை ஆட்சி.

★

---

## பாராட்டு விழா

**16—3—52**

ஞாயிறு மாலை 6-மணிக்கு

**காஞ்சியில்**

இரட்டைமண்டபத்தருகில்

தி. மு. கழக ஆதரவு பெற்று வெற்றி பெற்ற

எம். எல். ஏ., எம். பி.க்களுக்கு பாராட்டு விழா நடைபெறும்.

சி. வி. எம். அண்ணாமலை வரவேற்புரை வழங்குவார்.

க. அன்பழகன் எம். ஏ., கே. ஏ. மதியழகன் பி. ஏ., பாராட்டுரை வழங்குவர்.

நகர தி. மு. க. காஞ்சி.

5-ம் பக்கத் தொடர்ச்சி

கொரியப் போர் — விரியவில்லை; கொடுமை அதிகமாகவில்லை. 'பெரிய உலக யுத்தமாக மாறும்' என கனவு கொண்டோரின் ஆசையில் மண் விழுந்தது. மேற்கத்திய முதலாளித்துவம், இந்த ஏமாற்றத்தைக் கண்டதும், பொருள்களைக் குவிக்கும் ஆசையைக் கைவிட்டது. ஆங்காங்கே, விலைவாசிகள் இறங்கலாயின! இதனால், இந்தியாவிலிருந்து, பொருள்களை வாங்கும் ஆர்வம், குறைந்தது—இதே நேரத்தில், இந்திய சர்க்கார் ஏற்றுமதித் தீர்வையை அதிகமாக்கவே — இந்திய 'சூதாடிகள்' கலங்கினர்! பொருள்களைச் சேமிப்பது பயன் தராது என்று கண்டனர்!!

விலை வாசிகள், இறங்கத் துவங்கியிருக்கிறது.

* * *

இந்த விலை இறக்கத்தைக் கண்ட மக்கள் குதூகலிக்கும் இதே நேரத்தில், வியாபாரச் சூதாடிகளோ, 'பாங்கி வட்டியைக் குறைக்க வேண்டும்' 'ஏற்றுமதி வரியைக் குறைக்க வேண்டும்' என, மகஜர் மேல் மகஜர் அனுப்பிக் கொண்டுள்ளனர். இந்த கோரிக்கைகளுக்கு இந்திய சர்க்கார் இணங்காமலிருக்க வேண்டும். அப்போதுதான், பண முதலைகளின், கொள்ளை லாபச் சதி, ஓரளவுக்காவது அடங்கும்!

விலைவாசிகள் குறைவதைக் கண்ட, கொள்ளை இலாபக்காரர்கள் இப்போது கூக்குரலெழுப்பத் துவங்கியிருக்கிறார்கள். குமாரராஜா அறிவுரை தருகிறார்—அவரது தம்பி சிதம்பரம் செட்டியார் 'குறையுங்கள் ஏற்றுமதி வரியை' என்றார்-கோதாரி தெண்டனிடுகிறார். இத்தகைபோரின், கோரிக்கைகளுக்கு சர்க்கார் சம்மதிக்கக் கூடாது.

விலைவாசிகள் இறக்கம், நிரந்தரமானதாகயிருக்கச் செய்யவேண்டும். இப்போது இயங்கும் விலை, இப்படியே இருக்குமா... சில மாதங்களில் தீர்ந்து விடுமா என்று சிலர் கேட்கலாம்.

அகில உலகத்தையும் வைத்துப் பார்க்கும் பொழுது, விலைவாசிகள் மறுபடியும் ஏறுவதற்கு, சந்தர்ப்பமிருப்பதாகத் தென்படவில்லை. இந்த நிலை, நீடிக்கவேண்டும்—அப்போதுதான் கடந்த பல்லாண்டுகளாக கஷ்டப்பட்டுக் கிடக்கும் மத்திய தர—ஏழை—மக்கள் வாழ்வில், சிறிதாவது, நலம் ஏற்பட முடியும்.

இந்த நிலை சுமுகமாக தேண்டுமானால், மக்களுக்குத் தேவையான உற்பத்திப் பொருள்கள், கிடைக்கச் செய்யவேண்டும்-அதேபோல, கிடைக்கும் பொருள்களை வாங்கும் சக்தியும் பொது மக்களுக்கேற்பட வேண்டும்.

பண வீக்கத்தைக் குறைக்க, மத்திய தர மக்களிடமிருக்கும் 'வாங்கும் சக்தி' பறிமுதல் செய்யப் படுவதால், பயன் ஏற்பட முடியாது—இதை இந்திய நிதி இலாக்காவினர் உணரவேண்டும்.

பண மூட்டைகளுக்கு பணிந்துவிடாமல், உற்பத்திப் பெருக்கத்துக்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் வாழ்க்கைப் போராடும் ஏழை உலகின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டும்.

இந்த, அடிப்படை வேலைகள் செய்யப்படாவிடில்—விலை இறங்குவதும் பொருள்கள் குவிந்ததும் ஒரு 'மாயை'யாகத்தான் ஆகும்.

★

## நாகாஸ்தான்

நாகர்கள் (வடகிழக்கு எல்லைப் புற மலைவாசிகள்) தலைவர், பண்டித நேருவைக் கண்டு, தமது 'நாகாஸ்தான' கோரிக்கையைச் சொன்னார். நேரு மறுத்து விட்டார். 'தனி ராஜ்யமாக நாகர்கள் இருப்பது சாத்தியமில்லை' என்றாராம், நேரு. தொடர்ந்து, தாங்கள் போராடப் போவதாக நாகர் தலைவர் பிஜோ, அறிவித்துள்ளார். காந்திய முறையில் போராடப் போவதாகவும், ஆனால் குண்டுகள் வீசப்பட்டால் அதைத் தாங்கவும் தயங்காமாட்டோமெனவும், அவர் எச்சரித்துள்ளார். நாகர்கள் தொகை இரண்டு லட்சமாகும். 'தனி சுதந்திரநாடே' இவர்கம் கோரிக்கை.

## தண்டனையும் பாராட்டும்

சித்தையன் கோட்டையில், 144 தடையுத்தரவை மீறிய குற்றத்திற்காக, தோழர்-காஞ்சி. கல்யாணசுந்தரம் அவர்கள் 1—3—52ல் உத்திரமேரூர் கூட்டத்தின் பொழுது கைது செய்யப் பட்டு, 10—3—52 மாலை 4—மணிக்கு திண்டுக்கல் சப் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஒரு வாரசிறை தண்டனை ஏற்றார். உடனே மதுரை ஜெயிலுக்குக் கொண்டு போகப்பட்டார்.

காங்கிரஸ் பாசிசம் ஆடிய வெறிக் கூத்தின் ஒரு அங்கம்தான் சித்தையன் கோட்டை நிகழ்ச்சி. போகும் காலத்திலும் பொல்லாங்குபோகாது என்று தோழரைக் கைது செய்து, சிறை தண்டனை தந்துள்ளது. அடக்கு முறையினால் கிடைக்கும் லாபத்தை முழுக்க முழுக்க பெற்றும் காங்கிரஸ் சர்க்கார் கடைசி நேரத்திலும் தன் 'கைவரிசை'யைக் காட்டியிருக்கிறது. பாவம், அதனால் அந்தியகால திருப்தி ஏற்படுமானால், ஏற்படட்டும் அதற்கு!

சிறை தண்டனை முடிந்து 16, 17, 18 ஆகிய நாட்களில் முறையே மதுரை, திண்டுக்கல், சித்தையன் கோட்டை ஆகிய இடங்களில் பாராட்டுக் கூட்டங்கள் நடைபெறவும் ஏற்பாடாகியுள்ளன.

### உறுப்பினராகுங்கள்

தி. மு. க. மக்கள் மன்றம். அதன் வளர்ச்சியே, புது வாழ்வுக்கு அடிகோலும். உறுப்பினர்கள் எண்ணிக்கையே, ஸ்தாபனத்தின் முக்கியம்.

இந்த மாதத்தின் வேலைத்திட்டம் இதுதான்.

உறுப்பினராகுங்கள்! உறுப்பினராகச் சேருங்கள்!!

2-ம் பக்கத் தொடர்ச்சி

திருக்கிறேன்—பிரம்மஞான சங்கக் கூட்டங்களில் கலந்துகொள்ளவும், யாத்திரையாகவும் வந்திருக்கிறேன் என்று கூறுகிருர் எனவே ஆச்சாரியாரின் அழைப்பு, இந்த கவர்னர் வேலைக்கு முன்னறிவிப்பு! சந்தேகமில்லாமல்!!

இதுமட்டுமா! ஒருநாள் கோபால்சாமி ஐயங்கார், பிரகாசாவைப் பார்த்து, என்னுடன்உள்ள மந்திரிகளில் ஒருவரைச் சென்னைக்குக் கவர்னராகப்போகிறேன் என்று கூறினாராம்—பொருளற்ற பேச்சா!

இதுமட்டுமல்லாமல், தேர்தல் முடிவுகள் வெளியானபிறகு, அவைகளைப் பரிசீலனை செய்தபடி பேசிக்கொண்டிருந்தபோது, டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், நீங்கள்சென்னைக்கு வந்தால் நல்லது, என்ருராம்.

இவ்வளவும், அந்த விருந்துக் கூட்டத்திலேயே, கவர்னர் பிரகாசா கூறியிருக்கிறார்.

ஆகவே ஆச்சாரியாரின் வளமான மனதிலே உதித்து, கோபால்சாமி ஐயங்காரால் சீராட்டப்பட்டு, டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரால் பாராட்டப்பட்டு, வெளிவருவதுதான் இந்த கவர்னர் நியமனம்.

எவ்வளவு சுலபமாக, திடநம்பிக்கையுடன் அவர்கள், கவர்னர் பதவியை உண்டாக்குகிருர்கள் என்பதைக் கவனியுங்கள்.

சிதம்பரனர் சிறையில் செக்கிழுத்துக் கொண்டிருந்தபோது கோபால்சாமி ஐயங்கார் போலீஸ் தடிகளுக்குப் பூண் போட இவ்வளவு செலவு ஆகும், துப்பாக்கி ரவைகளுக்கு இவ்வளவு பணம் தேவைப் படும் என்று ஏகாதிபத்திய கணக்கு தயாரித்துக் கொண்டிருந்தார். அவர் சுயராஜ்ய சர்க்காரிலே வீற்றுக்கொண்டு, மொகல்பாதுஷா பேசுவது போலப்பேசுகிருர் என் சகாக்களில் ஒருவரைக் கவர்னராக நியமிக்கப் போகிறேன் என்று.

கோபால்சாமி ஐயங்காரால், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே பண்டித நேருவைக் காஷ்மீரில் உள்ளே நுழையாதே என்று உத்தரவு போட்டு தடுக்க முடிந்தது—இன்று சர்க்காரிலே சுகாவாக அமர்ந்துகொண்டு, கவர்னர்களை நியமிக்க முடிகிறது! இது அல்லவா யோகம்!! உலக வரலாற்றிலே தேடிக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம் இப்படி ஒரு கோபால்சாமியாரை. இவர் எடுத்து வீசுகிருர் கவர்னர் பதவிகளை, இங்கே இளித்தவாயர்கள் நம்மை ஏசுகிருர்கள். இவரும் ஆச்சாரியாரும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் சென்னைக்குக் கவர்னராக பிரகாசா எனும் பிரமுகர் வேண்டுமென்று திட்டமிட்டு வேலை செய்துள்ளனர் என்று கூறுவது, தவரு?

பார்ப்பன ஆதிக்கத்தையா ஒழிக்கப் பார்க்கிருய், காங்கிரசை ஒழித்தால், பார்ப்பன ஆதிக்கம் ஒழியும் என்ற எண்ணத்தால் சென்னையில் காங்கிரசை ஒழித்திடவா துணிந்தாய், இதோ பிடி சாபம்! என்கிருரே கோபால்சாமி ஐயங்கார்!

ஜாதிக் கொடுமை, வகுப்பு ஆதிக்கம் என்றெல்லாம் அடிவயிறு வலிக்க வலிக்கப் பேசி, 'ஓட்டுகளை'க் காங்கிரசுக்கு எதிராகவா போகும்படி செய்தாய், இதோ பார், கவர்னர் யார் என்று கண் திறந்து பார்! தேஜஸ் தெரிகிறதா, தெளிவற்றவனே தெரிந்துகொள், இவரை எமது ஆச்சாரியார் அன்ருருநாள் அருகே அழைத்து அந்தரங்கமாக சேதி சொன்னர், இன்று அவரை கவர்னராகக் கொண்டு வருகிறேன் காணுய்! என்று சோப்புச் சீமான் சொல்லாமற் சொல்கிருர்.

ஓட்டுகளப்பா உங்களிடம் இருப்பது, வெறும் ஓட்டுகள், என்னிடம் இருப்பது என்ன தெரியுமா? கவர்னர்கள், என் பேனு முனையில்!!—என்று கூறும் கோபால்சாமி ஐயங்கார் உங்கள் மனக்கண்முன் தெரியவில்லையா!

ஸ்ரீமந் நாராயணமூர்த்தி அப்போது முகமலர்ச்சியுடன், தேவர்களை நோக்கி, அஞ்சற்க, நாம் வராக அவதாரம் எடுத்து உம்மை ரட்சிப்போம்—என்று கூறினர்—இது புராணம்!—ஆமாம்! புராணம் காட்டும் வழிதானே இப்போதும் வேண்டுமென்று பேசுகிருர்கள் பூஜ்யர்கள்.

இதோ பாருங்களேன், எந்தச் சென்னை, பார்ப்பனீயத்தை எதிர்க்கிறதோ அங்கு பார்ப்பனப் பிரமுகர் தங்களுக்குகந்த ஒரு பிரமுகரைக் கவர்னராக நியமிக்கும்படி நேருஜீயைக் கேட்டு, அவர் அங்ஙனமே ஆகுக! என்று அருளியிருக்கிருர். புராணம்! புது உருவில்!!

அவர்கள், அவரை அழைத்து வருகிருர்கள். பிறகு, அவர், அவர்களுக்காக அல்லாமல் நமக்காகவா பாடுபடமுடியும்!

★

# மாணவருலகில்!

அரியலூர்:- 28—2—52 அன்று உயர் நிலைப்பள்ளி மாணவர் பேரவைக் கூட்டர், திருச்சி மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவரும் புதிதாக சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான தோழர் ராஜா சிதம்பரம் M. L. A. தலைமையில்தோழர் அண்ணுதுரை மாணவர்கள் நிலைபற்றி பேசினர்.

உடையார்பாளையம்: 29—2—52 அன்று மாலை 5-மணிக்கு உயர் நிலைப்பள்ளி மாணவர் சங்கச்சார்பில்புதிதாகத்தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் K. R. விசுவநாதன் M. L. A. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தி. மு. க. பொதுச் செயலாளர் சி. என். ஏ. சொற்பொழிவாற்றினர்.

ஜயங்கோண்டம்: 29–2–52 அன்று மாலை 7-மணிக்கு இவ்வூர் உயர்நிலைப்பள்ளியின் சார்பில் நடைபெற்ற மாணவர்கள் கூட்டத்தில் சி.என். ஏ. சொற்பொழிவாற்றினர். புதிதாகச் சட்டசபைக்குத்தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் பழனியாண்டி M. L. A. இக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினர்.

✱

கோவை மாவட்ட திராவிட மாணவ முன்னேற்றக் கழகக் கிளைகளின் செயலாளர்கள் தங்களது செயற்குழுவின் முழு விவரத்தையும், 'சிந்தனைச் செல்வன்—கோவை மாவட்ட தி. மா. மு. க. மிசின்வீதி திருப்பூர்' என்ற முகவரிக்கு எழுதுமாறு கோவை மாவட்ட மாணவச் செயலாளர் அ. ச. இளங்கோ கேட்டுக் கொள்கிருர்.

## பர்மிய எல்லையில்

பார்மோசாத் தீவில், பயந்து கிடக்கும், சியாங்–கே–ஷேக்கின் படைகள், பர்மாவின் வட பகுதிக்குள் கொண்டுவந்து குவிக்கப்படுவதாக, செய்திகள் வந்து கொண்டுள்ளன.

இந்த நடவடிக்கை, செஞ்சீனுவின் மீது படையெடுக்கத் தூண்டும் காரியமெனக் கருதப்படுகிறது. சீனுவின் எல்லைக்கு வெளியே, குவிக்கப்படும், சியாங்–கே–ஷேக் படைக்கு, அமெரிக்காவிலிருந்து ஆயுதத் தளவாடங்கள் அனுப்பப் பட்டுக் கொண்டிருக்கின்றவாம்

தாய்லாந்திலிருந்தும், பார்மோசா மூலமும் அமெரிக்க ஆதிபத்திய வாதிகள், துருப்புக்களுக்கான தளவாடங்களை, அனுப்பிக் கொண்டுள்ளனராம்.

பர்மிய எல்லையில், இந்தப் படைகள் உலவுவதுா சம்பந்தமாக, பர்மிய சர்க்கார் கலங்கியிருக்கின்றனர்—இதனுல் பர்மாவின் அமைதிக்கு பங்கம் ஏற்படக் கூடும் என்ற பயத்தால். இந்தச் சம்பவம் பற்றி, இந்தியப் பிரதமர் பண்டித நேரு, அண்மையில் கண்டித்திருக்கிருர்.

பர்மாவுக்குள் கொமிண்டாங் படைகள் கொண்டுவந்து திணிக்கப்படுவது, உலக சமாதானத்துக்குப் பங்கம் விளைவிக்குமென்றும், அவைகள் கடலை நோக்கித் துரத்தப்பட வேண்டுமெனவும், பண்டித நேரு அறிவித்துள்ளார்.

இதுபற்றி, அமெரிக்க அரசாங்கமோ, யாதொன்றும் வெளியிடாமலிருக்கிறது — அமெரிக்க சார்பில் பேசுபவரோ, 'ஆயுதத் தளவாடங்கள் அமெரிக்காவால் அனுப்பப்படவில்லை யென்றும் யாரோ சில தனிப்பட்ட அமெரிக்க கம்பெனிகள், சியாங்–கே–ஷேக் தந்த 'ஆர்டரின்' பேரில், அனுப்பியிருக்கலாமென்றும்' பித்தலாட்டப் பேச்சுக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிருர்கள்.

ஆனுல், உலகத்தின் கண்களுக்கு உண்மை தெரியாமலில்லை—சின்னஞ்சிறு தீவுக்கு விரட்டப்பட்ட, சியாங்கைத்தான "சீனு" என்ற பெயருடன் ஐக்கிய நாடுகள் சபையில் பிரதிநிதித்துவம் வகிக்கச் செய்து வருகிறது, அமெரிக்கா.

அதோடு, மக்களின் பிரதிநிதித்துவத்தோடு விளங்கும் செஞ்சீனக் குடியரசை, இன்னும் அமெரிக்கா அங்கீகரிக்கவில்லை. எரிச்சல் கண்களோடு, பார்த்துப் பெருமூச்சு விடுகின்றனர், அமெரிக்க ஆதிபத்திய வாதிகள்.

கம்யூனிஸ்டுகள் சார்பில் அமைந்துவிட்ட சீனக் குடியரசு கண்டு, ஆத்திரமடைந்து கிடக்கும் அமெரிக்க முதலாளித்துவம், இப்போது "நடவடிக்கை"க்கு, வித்திடுவதையே உணர்த்துகிறது—பர்மாவின் எல்லையில் கொமிண்டாங் படைகள் உலவும் நிகழ்ச்சி.

நாலாயிரத்திலிருந்து பத்தாயிரத்துக்குட்பட்ட படைகளுக்கான, தளவாடங்கள், பர்மிய எல்லையில் கொண்டுபோய் குவிக்கப்படுகின்றனவாம் — தனிப்பட்ட அமெரிக்க விமானக் கம்பெனிகள் இந்தச் "சேவை"யைச் செய்து வருகின்றனவாம்.

பர்மிய எல்லையில் உலவும் இந்தப் படைகளுக்கும் பர்மியருக்குமிடையே தகராறும் கைகலப்பும் அடிக்கடி நடக்கத் துவங்கியிருப்பது கண்டு, பர்மிய சர்க்கார் கலங்கியிருக்கிறது.

உண்மையில், சியாங்–கே–ஷேக்கின இந்தச் செய்கை, மாபெரும் போரை, ஆசிய பகுதியில் சிருஷ்டித்தாலும் ஆச்சரியப்பட முடியாது.

செஞ்சீனுவை வெறுக்கும், அமெரிக்காவின் உதவி, 'ஒரு போருக்கான, ஆயத்தமே இது' என்றே விளக்குகிறது.

இந்த நடவடிக்கை உடனே தடுக்கப் பட்டாகவேண்டும் — சமாதானம் விழைவோரால். இன்றேல், மூன்றுவது உலகப் போருக்கான தீ, ஆசியாவில் மூட்டப்பட்டுவிடும்.

இந்த ஆபத்து ஏற்படாமல் தடுக்க, இந்திய சர்க்கார் தன்னாலான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

❋

## ஆசிரியருக்கு கடிதம்

ஐயா,

மதவெறியைத் தூண்டும் ஸ்தாபனங்களை ஒழித்துவிட வேண்டுமென ஓயாது பேசி வருகிருர், டில்லித் தலைவர் நேரு. ஆனுல் காந்தியாரின் உயிரைக் குடிக்குமளவுக்கு வளர்ந்து வாகை சூடிக்கிடக்கும் இந்துமத வெறி, பரவ, இரகசியமாக நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளை உங்கள் பார்வைக்கு கொண்டு வருகிறேம்

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில், வெளியாரின் தூண்டுதலோடு 'ஒரு சிலர்' ஆதரவில், ஆர். எஸ். எஸ். நடவடிக்கைகள் துவக்கப்பட ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

நாள்தோறும் சில மாணவர்களை அழைத்துச் சென்று ஆர். எஸ். எஸ். முறைகளில், உடற்பயிற்சி சிலம்பு விளையாட்டு முதலியவைகளை சொல்லித் தரும் காரியங்களில் சிலர் ஈடுபட்டு வருகிறுர்கள்.

இந்த முயற்சிக்கு, வகுப்பு வெ… யர் சிலரின் ஒத்தாசையுமிருப்பத… கத் தெரியவருகிறேம்.

அறிவியக்கக் கதிர்களை பர… விடும் அண்ணுமலை நகரில், இத்… கைய பிற்போக்கு ஸ்தாபன… களுக்கு உயிரூட்டும் வேலைகளி… வேண்டுமென்றே, வெளியா… சிலர் ஈடுபட்டிருப்பதாகவும் பேசி… கொள்ளப்படுகிறது.

மாணவருலகு விழிப்படை… திருக்கிற இந்த நேரத்தில், இ… போன்ற முயற்சிகள், நிச்சயம் மு… யடிக்கப்பட்டுவிடும் —முற்போக்… எண்ணங்களால்.

எனினும், இந்த அளவுக்கு… துணிச்சலோடு வகுப்பு வெ… ஸ்தாபனங்கள் உலவத் துவ… யிருக்கும் உண்மையை, எடுத்… சொல்லவே, இதை எழுதுகிறே… —பொறுப்புள்ளோர் கவனத்தி… படுமென்ற ஆசையால்.

அ. நகர்
மார்ச் 5.

ஒரு மாணவன்

Edited, Printed & Published by C. N. Annadurai M A., at 'Dravidanadu" Press,
95. Tirukkachinambi St., Kancheepuram.